தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

# பேராசிரியரின் பெரியாழ்வார் காட்டும் ஆன்மீகநெறியும் சமுதாயநெறியும்

## Spiritual and Social Ethics revealed by Professor's Periyazhvar

**முனைவர் ந. ஜெயசுதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோவை, தமிழ்நாடு, இந்தியா.
**Dr. N. Jayasudha,** Assistant Professor of Tamil,
Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0957-9229**
**DOI: 10.5281/zenodo.7275611**

### Abstract

*Periyazhvar is the natural name obtained by him for his contributions and devotion among the twelve alwars of Almighty Lord Vishnu. To express the devotion of Periyazhvar (Vishnu Sidhan), Prof. N. Suppuratiyar has published a book bearing his name which has disclosed many specialities on Periyazhvar. In modern life, from the birth of the child to death. everything is planned but they forget to put the credits. Mukunda Pattar and Padmavalliyamai of Sri Viliputhur named their son Vishnu Siddhan. He started to explore from his young days what kind of work and service he can do for Lord Vishnu. He set up a beautiful Nandavanam and prepared garlands for Tirumal every day. His books are "Tirupallandu" and "Periyazhvar Thirumozhi". Alwar lived till the age of 85. He finds Andal in his Nandavanam and says that she is the divine flower and belongs to Lord Vishnu. All this devotion to God paves the way to salvation. Nowadays, people fail to know the benefits of worship and the chances to accumulate with God. As a Professor, Subbu Reddiar got a great chance to know about the great value and happiness hidden in Vaishnavism and he dug out the secrets of the Tamil world. Professor shares that Periyazhvar has lived his life uniting him with God. He has recorded his ideas that make sense of the spiritual longings of Periyazhvar.*

**Keywords:** Spiritual, Social Ethics, Professor Periyazhvar.

### ஆய்வுச்சுருக்கம்

*எல்லாம் வல்லவிஷ்ணுவின் திருநாமத்தை இயற்பெயராகப் பெற்றவர் பெரியாழ்வார். விஷ்ணுசித்தன் என்ற பெரியாழ்வாரின் பக்தியை பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் வெளிப்படுத்த, அவர் பெயர் தாங்கியே தன்நூலைப்படைத்துள்ளது மிகவும் சிறப்புடையது. இன்றைய காலகட்டங்களில் குழந்தை பிறந்தது முதற்கொண்டு இறுதிக்காலம் வரைக்கும் செலவுக்கணக்குகள் போட்டு வாழ்க்கையை முன்னேற்பாட்டுடன் வாழ்கின்றனர். ஆனால் வரவுக்கணக்குப் போட மறந்துவிட்டனர். இங்கு வரவு செலவுக்குத்தக்க புண்ணிய வரவாக இருக்க வேண்டும். ஸ்ரீவில்லிபுத்தூரில் பிறந்த தன்மகனை முகுந்தபட்டரும் பதுமவல்லியம்மையும் இறைவன் விஷ்ணுவைத் தம்சித்தத்தில் கொண்டிருக்க வேண்டி, விஷ்ணுசித்தன் என்ற பெயரைச் சூட்டியுள்ளனர். அப்பெயரைத்தாங்கியவர், இறைவனுக்குத் தான் என்ன பணிசெய்ய வேண்டும் என ஆய்ந்து தன்பணியை மேற்கொண்டவிதம், அழகிய*

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

*நந்தவனம் அமைத்து திருமாலுக்கு நாள்தோறும் மலர்மாலை தொடுக்கும் பணியைச் செய்தவரும், பட்டர்பிரான் என்றவிருதையும் பெற்றவர். "திருப்பல்லாண்டு", "பெரியாழ்வார் திருமொழி" ஆகிய இரண்டு பிரபந்த நூல்களை எழுதியவர். 85 வயது வரை வாழ்ந்து தன் திருப்பணியைச் செய்துள்ளார். ஆண்டாளை தன் நந்தவனத்திலே கண்டெடுத்து இறைவன் கொடுத்த தெய்வமலர் என்று சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாளை இறைவனுக்கே உரியதாக்குகின்றார். இதெல்லாம் இறைவன் மீது கொண்ட பக்தி. அதனால் முக்தியும் அடைந்தார் அன்று. இன்றைய பக்தியில் விரக்திதான் அதிகம். காரணம் வழிபடத் தெரியவில்லை. இறைவனோடு ஒன்றத் தெரியவில்லை. புராணங்கள் சொல்லும் கதைகளில் உண்மை பொய் தெரிவதில்லை. விவாதிக்கின்றோமே தவிர. அக்கதைகள் உணர்த்தும் பக்தியையும் வாழ்வியலையும் நம்வாழ்வோடு பொறுத்திப் பார்க்க தவறிவட்டோம் என்றே சொல்லலாம். இம்மையிலே மறுமைக்கும் உரிய செல்வத்தைத் தேடிக்கொள்ளும் வழி குறித்த வரலாற்றை படிக்கும் போது வைணவத்துள் பெரிதும் ஈடுபாடு இல்லாத நான் பேராசிரியரால் மிகுந்த மதிப்பும் மகிழ்ச்சியும் என்னுள் எழுகின்றது. இன்னும் பெரியாழ்வார் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றது. பெரியாழ்வார் தன் வாழ்வோடு இறைவனை ஐக்கியப்படுத்தியே வாழ்ந்துள்ளார். அவர் வாழ்வைப் பேராசிரியர் படித்து உணர்ந்தவை பலவாகும். அதன் வழிப் பெறப்பட்ட கருத்துக்களையெல்லாம் ஒன்று திரட்டி நூலாக்கங்கள் செய்துள்ளார். அதன் வழிப்பட்ட ஆன்மீக சமுதாய நெறிகளை உணர்த்தும் கருத்துக்களை என்புலனின் உதவியோடு இவ்வாய்வில் பதிவு செய்ய விளைகிறேன்.*

**குறிப்புச்சொற்கள்:** பேராசிரியர் – பெரியாழ்வார், காட்டும், ஆன்மீகநெறியும், சமுதாயநெறியும்.

**முன்னுரை**

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் எழுதிய விட்டு சித்தன் விரித்த தமிழ் என்ற இந்நூலில் பெரியாழ்வாரின் பாடல்களையெல்லாம் தொகுத்தளித்துள்ளார். விஷ்ணுவின் பக்தரான பொரியாழ்வாரின் இறைவனுடைய பெருமைகளையெல்லாம் எடுத்துப் பாடிய பாடல்களில் உள்ள சுவைபெரும் பகுதிகளையெல்லாம் வைணவப்பாங்கிலேயே கட்டுரையாக அமைத்துள்ளார் .சைவமும் வைணவமும் வேறு மதங்களாயினும் இரண்டுமே இவ்வுலகில் நிலைத்து நிற்கின்றன. சமுதாயத்தில் ஆன்மீக ஒழுக்கங்களை நிலைநிறுத்தவே சமயஇலக்கியங்களைப் பாடியுள்ளனர். அவ்வகையில் தமிழ் மொழித்துவத்தோடு அமைந்த இந்நூலில் ஆன்மீக சமுதாயக் கருத்துக்களைக் காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 1, November 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**ஆழ்வார்கள்**

ஆழ்வார்கள் என்பதற்குப் பொருளாகப் பல ஆய்வறிஞர்கள் விளக்கமளிக்கின்றனர். அவர்களுள் தேவநாதன், **தங்கள் பாசுரங்கள் மூலம் உலகவுயிர்கள் நலமாய்த்திகழவும், உயிர்களைப் படைத்த இறைவன் மகிழவும் தொண்டாற்றியவர்கள் ஆழ்வார்கள் (பன்னிரு ஆழ்வார்கள், ப.6)** என்றும், சுஜாதா அவர்கள் ஆழ்வார் என்ற சொல்லுக்கு, **பகவானின் குணங்களில் ஆழ்ந்து ஈடுபடுபவர்களை ஆழ்வார்கள் என்று சொல்லுவார்கள் (ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம், ப.5)** என்றும் விளக்கமளிக்கின்றனர். ஆழ்வார்கள் அனைவருமே உலகில் உள்ள அனைத்து உயிர்களும் இன்பமுற்றிருக்க வேண்டி, இறைவனுக்காகவே இறைவன் மீது முழுமையாக ஆழ்ந்து தொண்டாற்றியுள்ளவர் ஆழ்வார்கள் என்பதை அறியமுடிகின்றது.

**பெரியாழ்வாரும் பாண்டியனும்**

நடுநிலை நின்று அரசாட்சி செய்து மக்களைக் காப்பாற்றும் மன்னனை இறைவனாக மதிக்கப்படுவான் என்று வள்ளுவப் பெருந்தகை கூறுவார்.

> **முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
> **இறையென்று வைக்கப் படும் (குறள். 383)**

இறைவனுக்கு நிகராக மதிக்கப்படும் பாண்டிய மன்னன், அரச வாழ்வினின்று நீங்கி ஆன்மீக நெறிச்சென்று இறைவனை அடையமுயலுகிறார். வ.சுப. மாணிக்கம் தனது நூலில், **திருவாசகத்தில் ஊண் வாழ்க்கையை ஊன் வாழ்க்கை என மாணிக்கவாசர் இகழ்வார் (தொல்காப்பியத்திறன், ப.130)** என்ற இக்கருத்தினை மன்னன் உணர்ந்தும் இருக்கலாம் .பாண்டிய மன்னனின் ஆன்ம வாழ்க்கைப் பயணத்திற்கு வழி காட்டுகிறார் ஒரு திருத்தலப்பயணி,

> **இரவில் வேண்டிய உணவு முதலியவற்றைப் பகலில் தேடிக் கொள்ளுகின்றனர். மழைக்காலங்களில் தேவையானவற்றை மற்றை எட்டுத்திங்களில் தேடிவைத்துக் கொள்கின்றனர். முதுமையில் தேவையானவற்றை இம்மையில் முயற்சி செய்கின்றனர். ஆனால் இப்படிப்பட்ட விவேகிகள் மறுமைக்கு வேண்டியவற்றை இம்மையில் தேட முயல வேண்டாவோ? என்று தானும் இப்போது அந்த வழியைத் தான் நாடிச் செல்லுவதாக உரைக்கின்றான். (விட்டு சித்தன் விரித்த தமிழ், ப. 11)**

என்பதைப் பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் பதிவுசெய்கின்றார்.

பயணியின் சொற்கள் மன்னனின் அடி மனதில் பல கேள்விகளை எழுப்பி சிந்தனையில் ஆழ்த்தியது. மறுமைக்குரிய செல்வம் எது? என்பதைக் கண்டறிய வேத ஆகம முறைகள் கற்றுத் தேர்ந்த புலவர்கள், தர்க்க வாதிகள், யோகிகள், நார்த்திகர்களின் விவாதங்களில் வல்லவர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்து பல பொன்னும் மணியும் நிறைந்த பொற்கிழியை அரசவையின் தோரணவாயிலில் பரிசுப் பொருளாகத் தொங்கவிட்டான். பலரின் உரையும்,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

செவிமடுத்த மன்னனுக்கு பெரியாழ்வாரின் சொல்லின் உண்மையில் மயங்கிப் போகின்றார். இறைவனோடு ஒன்றிய பெரியாழ்வார், **வாழ்வின் நோக்கமே மனித நிலையிலிருந்து சரிந்து விலங்கு நிலைக்குச் செல்லாமல் முயன்று முயன்று தெய்வ நிலைக்குச் செல்வதேயாகும். (சிந்தனைச்சித்திரங்கள், ப. 167)** என்கின்ற கருத்துச் சிந்தனையில் ஊறிய ஆழ்வார், அமைதியும் பொறுமையும் கொண்டு அன்பு உணர்ச்சியால் சமயவாதிகள் கேட்ட கேள்விகளுக்கு விடை கூறுவதாகவும், தீய எண்ணங்களை நல்லெண்ங்களாலும், அறியாமையை அறிவினாலும், வீண்பெருமையைப் பணிவினாலும் வென்று வாகை சூடுகின்றார்.

காரணப்பொருளே கடவுள் என்று விளங்க வைத்துள்ளார். எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் உண்டாகின்றனவோ, எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் நிறைவு பெறுகின்றனவோ, எந்த ஒரு பொருளால் எல்லாப் பொருள்களும் இறுதியில் சேர்ந்து விடுகின்றனவோ அந்தப்பரம் பொருளே தியானத்திற்கு உரிய இறைவன் என்றும், அவனை நோக்கி வழிபடுவதும் அவனுடைய ஆயிரம் திருநாமங்களை நாவால் உரைத்து வழிபடும் போது பக்தி என்ற பெரும் ஆன்மீக நெறியில் எளிதாகக் கொண்டு சேர்க்கும். அதுவே முக்திக்கு வழி கொடுக்கும் என்ற பெரும் பேருரையின் இறுதியில் ஞானபக்தியே இம்மைக்கும் மறுமைக்கும் உறுபெருஞ்செல்வம்' என்று சொல்லிமுடிக்கின்றார். அப்பொழுது பரிசுப் பொருளான பொற்கிழி பெரியாழ்வாரை நோக்கி வளைய, பாண்டியன் அக்கிழியை அறுத்து ஆழ்வாரின் பாதத்தில் வைத்து வணங்கிய வரலாற்றை பாண்டியபட்டர் என்ற பிற்கால ஆசிரியர் பதிவு செய்துள்ளதை பேராசிரியர் விளக்குகின்றர். இதன்வழி ஆன்மீக நெறியை சென்றடைய இறைவன் மீது நாம் கொண்ட நம்பிக்கையும், அவன் நாமத்தையும் என்றென்றும் நம் மனதில் எண்ணிக் கொண்டு, அவனின்றி எதுவுமில்லை என்பதை உணர வேண்டும். அவன்மீது தீராத பக்தி கொண்டு வழிபட்டால் இறைவனை அடையலாம் என்பதை உலகிற்கு உணர்த்த முற்படுகிறார் பேராசிரியர்.

**பெரியாழ்வாரின் ஆன்மீகம்**

> **சுப்புரெட்டியார் தமது நூலில் பெரியாழ்வாரின் பக்தி நெறியை விளக்கும் போது, எம்பெருமானின் ஆயிர நாமங்களை நவிற்றுவதற்கு வாய்ப்பில்லாது போயினும் திருமண்காப்பின் போது நவிற்றப்படும் பன்னிரண்டு திருநாமங்களையாவது நவிற்றுவது பயன்தருவது. இந்தப்பன்னிரண்டு திருநாமங்களாவன - கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், வீட்டுணு, மதுசூதணன், திரிவிக்கிரமன், வாமணன், சிரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பனவாகும். (விட்டுச்சித்தன் விரித்த தமிழ், ப. 252)**

இதன் வழி இறைவனின் திருநாமத்தை மனதார ஓயாமல் சொல்லிக் கொண்டிருந்தாலும்இறைவனை அடையலாம், திருமாலின் ஆயிரம் நாமத்தை நாவால்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

சொல்லும் போது பக்தி பெருகும் என்கிறார் அவருடைய திருப்பெயர்களுள் 12 பெயர்கள் மிகுந்த சிறப்புடையது என்பதை, **திருமாலுக்கு ஆயிரத்தெட்டு திருநாமங்களே இருந்த போதிலும் அவற்றுள் பன்னிரண்டு திருப்பெயர்களே மிகுந்த சிறப்பு வாய்ந்ததாக வேதங்கள் முதலாக இதிகாச புராணங்கள் கூறுகின்றன. (திருமால் நெறிக் கட்டுரைகள், ப.8)** என்று பரந்தாமன் கூறுவதன் வழியும், மேலும், காரியதரிசி, **ஓம்விச்வஸ்மைநம- அகிலாண்டமாயிருப்பவர் என்ற முதற் பெயர் கொண்டும் 1000. ஸர்வப்ரஹரண ஆயுதாய- எய்துவன எல்லாம் ஆயுதமாய்க் கொண்டவர் (விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்கள், ப.5-55)** ஆயிரம் பெயர்களையும் அதன் விளக்கமும் கொண்டு எழுதப் பெற்ற மிகச்சிறப்பான நூலை இவ்விடத்தில் பதிவு செய்கிறேன். ஏனென்றால் திருப்பல்லாண்டில் ஆழ்வார், இரண்டு திருநாமங்களை மட்டும் அற்பபலனுக்கு உருப்போட்டுக் கொண்டுள்ளீர்களே இதுதகாது! ஆயிரம் திருநாமங்களையும் வாயாரச் சொல்லி மகிழலாம் என்று வாழ்த்துப்பாட அழைக்கும் பாடலில் பாடியிருப்பதன் வழி இங்கு இதை கவனத்தில் கொள்ளலாம்.

**பல்லாண்டு பாடிய விஷ்ணுசித்தர்**

பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான பெரியாழ்வார் நூல் பாடிய நூல் திருப்பல்லாண்டு. இது 12 பாடல்களால் வைணவப் பக்தி கொண்டு நூல்களின் தொகுப்பான நாலாயிர திவ்யப் பிரபந்தத்தின் முதல் 1000 பாக்களில் முதல் 12 பாடல்கள் திருப்பல்லாண்டுப் பாடல்களாக அமைத்துள்ளார் நாதமுனிகள். பல்லாண்டு என்பதற்கு ரேவதி, **பல்லாண்டு என்பதன் பொருள் பல ஆண்டுகள் என்பதாகும். நீடுவாழ்க என்று வாழ்த்துப் பொருள் உடையதாகவும் விளங்குகிறது. (,ஆழ்வார் பாடல்களில் உருக்காட்சி, ப.125)** இவ்வரிகளின் மூலம் இறைவனைப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்திப் பாடியமைக்கு வலுசேர்க்கின்றது. அவர்பாடியபாடல்களில்,

**பல்லாண்டுபல்லாண்டு**
**பல்லாயிரத்தாண்டு**
**பலகோடிநூறாயிரம்**
**மல்லாண்டதிண்தோள்மணிவண்ணா**
**உன், செவ்வடிசெவ்விதிருக்காப்பு (நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப. 41)**

என்ற பாடலும்,

**அடியோமோடும்நின்னோடும்**
**பிரிவின்றிஆயிரம்பல்லாண்டு**
**வடிவாய்நின்வலமார்பினில்**
**வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு (நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப. 41)**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
*A Bi-Yearly Peer-Reviewed International Journal*
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தை கூறிய பொரியாழ்வாரான பட்டரை பட்டத்து யானையின் மீது ஏற்றி நகர்வலம் வரச் செய்து பெருமைப்படுத்தினான் மன்னன். அப்போது இறைவன் இறைவியோடு ஆழ்வார்க்குக்காட்சி அளிப்பதகவும் அக்காட்சி கண்டவர் மெய்சிலிர்த்து மகிழ்ந்ததோடு இறைவனுக்கு, "பாவிகளின் கண்ணெச்சில் பட்டு எம் பெருமானுக்கு என்ன தீங்குவருமோ? என்று அஞ்சியவர் போல் யானைக்கழுத்தின் மேல் கிடக்கும் மணியையே கைத்தாளமாகக் கொண்டு மங்களாசாசனம் செய்து பல்லாண்டு பாடுகின்றார் என்று ஆசிரியர் பல்லாண்டு பாடியதன் காரணத்தைக் குறிப்பிடுகின்றார். இதில் இறைவன் என்ற நிலையை மறந்து பல்லாண்டு வாழ்க என இறைவனைப் பாடுகின்றார். எக்கெடுதலும் இறைவனுக்கு இல்லை என்றால் தானே உலக உயிர்கள் நன்மை அடைய முடியும் என்ற சமுதாயக் கருத்தை முன்னிட்டு பாடியுள்ளார். ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்வதாகப் பல இடங்களில் பதிவு செய்கின்றார். அச்சொல்லுக்கான பொருளாக இராமசுப்பிரமணியம், **பெரியோர்கள் வழிபாடு ஆழ்வார்களால் துதிக்கப் பெறுதல்** (திருமகள் தமிழ் அகராதி, ப. 750). மேலும் இணையத்தில், **மங்களாசாசனம் என்பதற்கு நன்மையை வேண்டுகை** (https://agarathi.com/word) என்று பொருள் கூறுகிறது. ஆக, உலக உயிர்களின் நன்மையை வேண்டி இறைவனை வாழ்த்தி பெரியாழ்வார் பாடியுள்ளமைய அறியமுடிகின்றது.

**திருக்கோட்டியூரும் பெரியாழ்வாரும்**

திருக்கோட்டியூர் என்று பெயர் பெறுவதற்கு மணிமுத்தாநதிக்கரையில் உள்ள இத்திருப்பதி முற்காலத்தில் கதம்பமுனிவரின் புண்ணிய ஆசிரமமாக இருந்தது. இரணியன் மூவுலகங்களையும் ஆட்சிசெய்து தேவர்களை துன்புறுத்துகிறான். அவனை எப்படி ஒழிப்பது என்று வழி அறியாது திகைக்கின்றனர். தேவர்கள் கதம்பமுனிவர் உரையும் இத்திருத்தலத்தில் அரக்கர் எவரும் புகமுடியாது என்ற சாபம் இருந்ததால் மும்மூர்த்திகளும் தேவர்களும் சூழ்ந்து ஆழ்ந்து, ஆராய்ந்து ஒருமுடிவுக்கு வர இவ்விடத்தை தேர்ந்தெடுத்து ஒன்று கூடுகின்றனர். திருமால் நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனை வதைப்பது என்று முடிவு செய்கின்றார். தேவர்கள் யாவரும் கூட்டமாகச் சேர்ந்து ஆலோசனை செய்த இடமாதலின் இதனைக் கோட்டியூர் என்று வழங்குகின்றனர். திரு என்ற அடையுடன் இந்த ஊர் திருக்கோட்டியூர் என்று திருநாமம் பெற்று வழங்கலாயிற்று என்றும் இக்காரணம் உண்மையாகும் வகையில் இத்தலத்தில் மும்மூர்த்திகளும் காட்சி அளிக்கின்றனர் போலும் என பேராசிரியரின் இந்த ஊர் பற்றிய ஆய்வில் உள்ள கருத்து போன்றே மூவரில் லிங்கம் சுயம்புவாக அமைந்துள்ளதும் இத்தலப் பெருமையில் ஒன்றாக அறியமுடிகின்றதுன்றது.

**திருக்கோஷ்டியூர் கருந்தடமுகில் வண்ணனை**
**கடைக் கொண்டு கைதொழும் பக்தர்கள்**
**இருந்த ஊரில் இருக்கும் மானிடர்**

தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் அரையாண்டு பன்னாட்டு ஆய்விதழ்

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

**எத்தவம் செய்தார் கொலோ** (https://ta.wikipedia.org/wiki/)

என்று பரவசமாகப் பாடியுள்ளார். ஒன்றுபட்ட சமுதாயத்திற்கு ஏற்ப அனைவரும் கூடியிருந்து ஒரு செயலைச் சிறப்பாக முடிப்பதற்கு வழிவகுத்துள்ளனர்.

திருக்கோட்டியூருக்கு தன் நண்பண் செல்வநம்பியைச் சந்திக்கச் சென்ற பெரியாழ்வார் அங்கே கோயில் கொண்டுள்ள நாராயணமூர்த்தியைத் தரிசிக்கும் போது கிருஷ்ண அவதாரம் நினைவுக்கு வந்ததாகவும், அந்தக் கோயில் நந்தகோபன் மாளிகையாகவும், அந்த ஊர் ஆயர்பாடியாகவும் பெரியாழ்வாரின் மனக்கண்ணுக்கு மாறிவிடுகின்றன. மேலும், கண்ணனின் குழந்தைப் பருவநிலையில் காட்சிப்படுத்திய தன்மனம், தன்னை யசோதையாகவே எண்ணி தாயுள்ளம் கொண்டு பக்திப்பரவசத்தால் நாராயணமூர்த்தி, பிள்ளைப் பெருமானாகப் போற்றிப்பாடியுள்ளார் விஷ்ணுசித்தன். இவ்வாறு விஷ்ணு சித்தர் பக்தியினால், தான் இருக்கும் இடத்திலேயே தன் நினைவுகளால் பலமாற்றங்களைக் கொண்டு பரவசமாகப் பாடியுள்ளார்.இத்தகு மாற்றங்கள் தன்மனத்தால் இறைவனைப் பற்றிய தீராத எண்ணமே இவ்வாறு கற்பனை செய்ய முடியாதநிலையில் மனக்கண்ணால் கண்டு இன்புறுகிறார். இவர் மட்டுமல்ல எல்லா ஆழ்வார்களும் மனமொன்றி இறைவனை வழிபட்டுள்ளனர். இதை எவ்வாறு பெற்றார்? என்றால், தன் மனதைப் பக்குவப்படுத்தி ஐம்புலன்களையும் அடக்கியாளும் திறம் வாய்ந்த மனத்தைப் பெற்றுள்ளதே காரணமாகலாம். ஆழ்வார்கள், பெற்ற மனதை எவ்வாறு அனைவரும் பெறமுடியும்? என்ற வினா நம்முள் எழுகிறது.

மனித மனம் ஆராயும் ஆறாம் அறிவுபடைத்தது. இயற்கையெல்லாம் படைத்தது யார்? என்ற நம்மனச்சிந்தனை ஆராய்கிறது. அதன் பொருட்டு இயற்கைக்கும் மீறியசக்தி உண்டு என்பதை உணர்கிறோம். பின் மனம் நம் அறிவின்பால் செல்லாது எல்லாம் வல்ல இறை சக்தியின் மீது செல்கிறது.

**எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்**
**அங்கங்கேஇருப்பதுநீயன்றோபராபரமே (தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள், ப. 158)**

என்ற வரிகள் எங்கும் இருப்பது இறை என்பதை வலியுறுத்துகிறது. இந்த இறைவன் எப்படி இருப்பான்?. கருப்பா சிவப்பா ஆணா பெண்ணா. என்ற கேள்விகளுள் 'இயற்கையே இறைவன்' என்று உணர்ந்த சான்றோர் பலர். அதனால் தான் சிலப்பதிகாரத்தில்,

**திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்**
**ஞாயிறு போற்றுதும் ஞாயிறுபோற்றுதும்**
**மாமழை போற்றுதும் மாமழைபோற்றுதும் (சிலப்பதிகாரம், ப. 45)**

என்று இளங்கோவடிகள் இயற்கையைப் போற்றியுள்ளார். அதன் வழி வழிபட்டுள்ளனர். அந்த இயற்கையை வழிபட தன் ஐம்புலன்களையும் அடக்கியாளும் திறம் தன்னிடம் வேண்டும் அதற்கு,

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

**மெய்வாய்கண்மூக்குசெவியெனப்பேர்பெற்ற**
**ஐயவாயவேட்கைஅவாவினைக்கைவாய்க்**
**கலங்காமல்காத்துய்க்கும்ஆற்றல்உடையார்**
**விலங்காதுவீடுபெறும் (நாலடியார், பா. 59)**

என்ற பாடல் ஐம்புலன்களையும் அடக்கும் ஒருவன் வீடுபேறு என்ற இறைவனை அடையலாம் என்கிறது. இந்த வீடுபேறு தான் இம்மையில் மறுமைக்கானது. இறைவனை அடைவது என்று ஆழ்வார் விளக்கம் தந்துள்ளார்.

ஆழ்வார்கள் இயற்கை என்ற சக்திக்கு உருவம், வரலாறு கொடுத்து பக்தியை, இறை நிலையை உலகெங்கும் பரப்பினார்கள் என்பதை உணரலாம். அவ்வகையே பெரியாழ்வார்,

**கடல்கடைந்துஅமுதம்கொண்டு**
**கலசத்தைநிறைத்தாற்போல்**
**உடல்உருகிவாய்திறந்து**
**மடுத்தன்னைநிறைத்துக்கொண்டேன் (நாலாயிர திவ்வியப் பிரபந்தம், ப. 44)**

என்று விஷ்ணு சித்தன் தன்னுள் பெருமானை நிரப்பிக் கொள்கிறார். ஆம்! சித்தர் ஒருவரும், தன்னை அறியாது அறிந்த செய்தியை, **என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டேன் (தமிழ் இலக்கியத்தில் மனித நேய மாண்புகள், ப. 318)** இவ்வழியே இறைவனைப் பல கோணங்களிலும் அகக்கண்ணால் உற்று நோக்கி அடி முதல் தலை வரையிலும் உள்ள ஒவ்வொரு உறுப்புக்களையும் கண்டு அறிந்து, இன்பமுற்று ஆய்ச்சிமார்களை வந்து காணுமாறு பிள்ளைப் பெருமானின் பெருமைகளைப் பாடியுள்ளார்.

**பெயர்சூட்டுதல்**

` இல்வாழ்க்கையில் மிகமுக்கியப்பங்கு பிள்ளைப் பேறாகும். அப்பிள்ளை வேண்டி இன்றைய கால கட்டங்களில் இறைவனிடம் தவமாய்த் தவமிருக்கின்றனர். அன்றும் அந்நிலையில் இருந்த பெரியாழ்வாருக்கு நந்தவனத்திலே கிடைத்த பெண் குழந்தையை எடுத்து *கோதை* என்று திருமாலுக்கு சூட்டும் மலர்மாலையாகக்கருதி அழகிய பெயரைச்சூட்டிய பெரியாழ்வார். அவர் பாடல்களில் குழந்தைகளுக்கு இறைவனுடைய திருநாமத்தை வைக்க வேண்டும் என்கிறார். எம்பெருமான் திரு நாமங்களாகிய மாதவன், கோவிந்தன் என்பன போன்ற பெயர்களிட்டால் மறுமையில் அப்பேறுபெறக் குறையில்லை என ஆழ்வார் எண்ணங்களை வெளிப்படுத்துகிறார் பேராசிரியர். மேலும், மண்ணிற்பிறந்து மண்ணாகும் மானிடப் பேரிட்டு மகிழாமல் கண்ணுக்கு இனிய கருமுகில் வண்ணன் நாமமே நண்ணுமின் என்றவார்களை எடுத்துக்காட்டுகின்றார். மனிதனாகப் பிறந்த அனைவருமே இறைவனின் பெயரைவைக்க வேண்டும் என்று சமய இலக்கியங்கள் சொல்லியதன் வழியே இன்றும் பலர்

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

இறைவனுடைய திருநாமத்தில் இருப்பதைக் காண்கிறோம். தனது குழந்தைக்கு பெயர் வைக்கும் முன்னே நாம்கண்ணா, கண்ணா! என்று இறைவனின் திருநாமத்தையே இயல்பாக அழைக்கின்றோம். இறைவன் பெயர்வைத்தால் தினமும் அவன் நாமத்தைச் சொல்லும் வாய்ப்பு கிடைக்கின்றது.

இன்றும் நாட்டுப்புறம் சார்ந்த மக்களிடையே, சிறுதெய்வப் பெயர்களாக, மாரியம்மாள், காளீஸ்வரி, துர்க்கா, மகாலட்சுமி, கருப்புசாமி, கருப்பன், காமாட்சி என்ற பெயர்களும், பெருந் தெய்வப்பெயர்களாக, நடராஜன், திருமால், ஈஸ்வரன், பிரகதீஸ்வரன், விஷ்ணுப்பிரியா, லட்சுமி, அருணாச்சலம், குமரன், கதிரவன், தியாகராஜன், கண்ணன், மாதவன், கிருஷ்ணன், மீனாட்சி, சபரீஸ்வரன் போன்ற சிறுதெய்வ பெருந்தெய்வப் பெயர்களும் மனிதப் பெயர்களோடு கலந்து எல்லோர் இல்லங்களிலும் வலம் வருகின்றது.

அறிந்தும் அறியாமலும் தினமும் இறைவனின் பெயரை நாம் உச்சரித்துக் கொண்டு தான் உள்ளோம். மேலும், குழந்தைகளை அடித்தல், திட்டுதல் போன்ற காரியங்களைச் செய்யாமல் இருப்பதற்காகவும் இவ்வாறு இறைவன் பெயர் வைத்ததன் காரணமாகவும் இருக்கலாம். ஆக, இறைவனின் பெயரையே ஆழ்வார் சொன்னது போல இன்றளவும் வைத்துக் கொண்டுள்ளோம் என்பது பெருமைமிகு சிறப்புக்குரியது எனலாம். மேலும், இறைவன்மீது கொண்ட பக்தியால் நோன்பு (விரதம்) இருக்கும் பழக்கம் இருந்துள்ளதையும், சமுதாயத்தில் நடனமாடிய நிகழ்வுகுறித்தும், பிறந்த நாளன்று நீராடும் பழக்கமும் போன்ற சமூகநிகழ்வுகளும் இவர்பாடல்களில் அமைந்துள்ளமையை பேராசிரியர்ந.சுப்புரெட்டியார் விரிவாகப் பதிவுசெய்துள்ளார். இத்தகு பெருமையுடைய பெரியாழ்வார் பாடல்களிலும், பேராசிரியரின் விளக்கவுரையிலும் மனிதர்கள் பக்தியோடும் நல்பழக்கவழக்கங்களோடும் வாழ்க்கையில் பயணித்துவந்தால் இறைவனைஅடைவோம்.மோட்சம் அடையலாம்.

ஆழ்வாரும்சமுதாயமும்:

தமிழகத்தில் சமயப்பெரியோர்களான நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஊர் ஊராகச் சென்று தங்களது சமயங்களைப் பரப்பினார்கள். நாட்டு மக்களை நல்வழிப்படுத்த சமயமே சிறந்தது என்பதைக் கண்டுணர்ந்து அதைக்கைக் கொண்டு உலகெங்கும் தங்களது சமய போதனைகளைப் பரைசாற்றியுள்ளனர் என்பதை அறிவோம்

**செய்க தவம் செய்த தவம் நெஞ்சே தவம் செய்தால்**

**அன்பிற் சிறந்த தவம் இல்லை (பாரதியார் கவிதைகள், ப. 155)**

அன்புடையவர் ஆனந்தமாக வாழ்வார் எனலாம். பொரியாழ்வார் சமயத்தின் வழியாகச் சமுதாயத்தைச் சென்றடைந்தார். இறைவனை எப்படி அடையலாம் என்பதற்கு சொன்ன வழிமுறைகள் அனைத்தும் சமூகத்திற்கானது, சமுதாயமக்கள் நல்வழிப்படுத்துவதற்கானது. இது போன்றும் பல, சமூகத்தில் ஆழ்வார்களின் பங்களிப்பைக் காணமுடிகின்றது.

E-ISSN: 2581-7140
Volume - 5, Special Issue - 1, November 2022
UGC CARE Listed Journal
Available at: www.ijtlls.com

**மனிதனால் உலகத்தை பார்க்கத்தான் முடிகின்றது. நாம் புறக் காட்சியை பார்க்கின்றோம் ஞானிகளும் அறிவியல் வல்லுநர்களும் உலகை உற்று நோக்கி ஆராய்கிறார்கள் (தமிழ் இலக்கியத்தில் ஆளுமைகள், ப. 325)**

இக்கருத்தின் வழியும் ஆழ்வார் போன்ற சமயவாதிகளின் போக்கையும் உணர்ந்து சமுதாயத்திற்கு நல்வழி காட்டலாம். பகவானைத் தொழுபவர்களை தேவராஜன் மூன்று வகையாகப் பகுத்துக் கூறுகிறார்.

**செல்வத்தை அடைய வேண்டி இறைவனைத் தொழுபவர்கள். இவர்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.முதல் வகையினர் தாம் இழந்த பொருளை மீண்டும் அடைய வேண்டித் தொழுபவர்கள்.இரண்டாவது வகையினர் புதிதாகச் செல்வங்களைப் பெற வேண்டி இறைவனைத் தொழுபவர்கள். பரமபதத்தை அடைந்து பகவானுடைய திருவடிகளில் தினமும் கைங்கர்யம் செய்ய வேண்டும் என நினைப்பவர்கள் மூன்றாம் வகையினர். (வைணவமும் ஆழ்வார்களும், ப. 593)**

இக்கருத்தில் முதல் இருவரும் பிரதிபலன் எதிர்பார்த்து வழிபாடு செய்பாவர்கள்,மூன்றாம் வகையினர் இறைவனிடமிருந்து எப்பலனும் எதிர்பாராது முதல் இருவர் நிலைப்பட்ட மக்களையும் அழைத்து இறைவனைப் பற்றி பாடலாம் , வாழ்த்தலாம் என்று அழைக்கும் ஆழ்வார் பெரியாழ்வார் மட்டுமே எனலாம்.

**முடிவுரை**

விட்டுசித்தனாகிய பெரியாழ்வார் இம்மண்ணுலகில் உள்ளோர் வானுலக்த்தில் உள்ள இறைவனை அடைவதற்கான வழிமுறைகளை தன் பாடல் கருத்துகளில் விட்டுசென்று உள்ளார். இறையோடு தன் வழிபாட்டில் ஆன்மீகத்தையும் சமுதாய நலனையும் மனதில் கொண்டவராகவே வாழ்ந்துள்ளனர். அவ்வகையில் நாமும் நம் வாழ்வோடு ஆன்மீகத்தையும் இணைத்துக்கொண்டு வாழும்போது மனிதனுனுக்கு அன்பும் அறனும் பெற்று சமூக நலனில் அக்கரைகொண்டு வாழ்வோம் என்பதை உணர்வோம்.

**குறிப்பு நூல்கள்**

[1] இராமசுப்பிரமணியம். வ. *திருமகள் தமிழகராதி.* சுகான்ஸ் அப்பார்ட்மெண்ட்ஸ், சிவப்பிரகாசம்தெரு, சென்னை. 2004

[2] காரியதரிசி. *விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்கள்.* ஸ்ரீராம கிருஷ்ண தபோவனம், திருப்பெருந்துறை, முதல்பதிப்பு.1991.

[3] தேவநாதன். *பன்னிரு ஆழ்வார்கள்.* விஜயா பதிப்பகம், கோவை, 2007.

[4] தேவராஜன். *வைணவமும் ஆழ்வார்களும்.* ஸ்ரீசென்பகா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு-2009.

International Journal of Tamil Language and Literary Studies
A Bi-Yearly Peer-Reviewed International Journal
E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

[5] பரந்தாமன். *திருமால் நெறிக்கட்டுரைகள்.* திருவேங்கடவன் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு - 1990.

[6] பரிமேலழகர் (உ.ஆ). *திருக்குறள்.* பும்புகார்பதிப்பகம், சென்னை, 2001.

[7] மகாலிங்கம். *சிந்தனைச்சித்திரங்கள்.* அன்னம், நிர்மலா நகர், தஞ்சாவுர், பதிப்பு-2003.

[8] மாணிக்கம். *தொல்காப்பியத்திறன்.* மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், பதிப்பு-1984.

[9] சுஜாதா. *ஆழ்வார்கள் ஓர் எளிய அறிமுகம்.* கிழக்குப் பதிப்பகம், பதிப்பு-2011.

[10] சுப்புரெட்டியார்.ந. *விட்டுச்சித்தன் விரித்த தமிழ்.* பாரி நிலையம், சென்னை, முதல்பதிப்பு-1987.

[11] ரரவஸ். *நாலாயர திவ்ய ப்ரபந்தம்.* ஸ்ரீ பகவான் நாம பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2016.

[12] ரேவதி. *ஆழ்வார் பாடல்களில் உருக்காட்சி.* லட்சுமிபதிப்பகம், கூட்டுறவு நகர்திருவாரூர்-613701, முதற்பதிப்பு, 2004

[13] வரதராசனார் (உ.ஆ).*திருக்குறள் (தெளிவுரை).* திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, மு.ப.1959.

[14] சுப்பிரமணிய பாரதி. *பாரதியார் கவிதைகள்.* பாப்புலர் பப்ளி கேசன்ஸ், திருநகர், மூ.ப.-2002.

[15] ஸ்ரீசந்திரன் (உ.ஆ). *சிலப்பதிகாரம்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, பதிப்பு-2000.

[16] ஸ்ரீசந்திரன். *நாலடியார்.* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-34, மு.ப.-1989.

[17] கீதாஞ்சலி த. *பன்முக நோக்கில் தமிழ் இலக்கியம்.* காவேரி டெக், பொள்ளாச்சி, மு.ப.2018.

[18] சித்ரகலா, ம. *தமிழ் இலக்கியத்தில் ஆளுமைகள்.* ராஜா பப்ளிகேசன், திருச்சிராப்பள்ளி, 2021.

[19] விஷ்ணுப்பிரியா, இரா. *தமிழ்இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள்.* ராஜா பப்ளிகேசன்ஸ், திருச்சிராப்பள்ளி, மு.ப.-2019.

[20] ஜெயசுதா.ந. *தமிழ் இலக்கியத்தில் இறைநெறிகள்.* டுடே பதிப்பகம், சென்னை, மு.ப.-2018.

[21] சித்ரகலா. *தமிழ் ஆழி.* நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப.-2020.

[22] https://ta.wikipedia.org/wiki/ 21 டிசம்பர் 2021 அன்று அணுகப்பட்டது.

[23] https://agarathi.com/word 21 டிசம்பர் 2021 அன்று அணுகப்பட்டது.

**References**

[1] Ramasubiramaniyam. V. T. *Thirumagal Tamil Agarath*i. Sugans Apartments, Chennai, 600017.
[2] Kariyatharisi. *Visnuvin Aayiram Thirunamangal*. Sri Ramakirushna Thapovanam, Thiruparaithurai, 1991.
[3] Devanathan. *Panniru Aalvarkal*. Vijaya Pathippagam, Kovai, 2007.
[4] Paranthaman. *Thirumaal Nerik Katturaikal*, Thiruvengadavan Pathipagam, No 5, Thiruvalluvar Theru, Methha Nagar, Thamparam Chennai 600073, 1990.
[5] Devarajan. *Vainavamum Aalwarkalum*. Sri Senbaga Pathippagam, 32, b Kirushna Theru, Paandi Bazar, Chennai. Second Edition, 2009.

E-ISSN: 2581-7140 UGC CARE Listed Journal
Volume - 5, Special Issue - 1, November 2022 Available at: www.ijtlls.com

[6] Parimelalgar. *Thirukural*. Poompugar Pathipagam, Chennai, 2001.
[7] Mahalingam. *Sinthanai Sithirangal*. Annam, Nirmala Nagar, Thanjavur, 2013.
[8] Maanikam. *Tholkapiya Thiran*. Manivasakar Pathippagam, Sithamparam, 1984.
[9] Sujatha. *Aalvaarkal Oor Eliya Arimugam*. Kilakku Pathippagam, First Edition, 2011.
[10] Suppurettiyar. *N. Vittu Sithhan Virthha Tamil*. First Edition, 1985.
[11] Raravas. *Nalayira Thivya Pirapantham*. Sri Pakavan Nama Papli Kesan, Chennai, 2016.
[12] Revathi, *Alvaar Padalkail Urukkatchi*, Lakshmi Pathippagam, Thiruvaarur, First Edition, 2004.
[13] Varatharaasanar. *Thirukkural Thelivurai*, Thirunelveli Thenindia Saiva Siddantha Nootpathippu Kalagam, Thirunelveli, First Edition 1959.
[14] Sri Chandran. *Silapathikaram*. Varthhamanan Pathippagam, Chennai-17, First Edition 2000.
[15] Sri Chandran. *Naaladiyaar*. Varthhamanan Pathippagam, Mahalingapuram, Chennai - 34, First Edition 1989.
[16] Bharathiyaar *Kavithaikal*. Popular Puplication, Thirunagar, Third Edition, 2003.
[17] Geethanjali. *Panmuga Nookil Tamil Ilakkiyam*. Kaveri Tech., Pollachi, First Edition, 2018.
[18] Chitrakala. *Tamil Ilakkiyathil Aalumaikal*. Raja Publications, Thiruchirapalli, First Edition, 2019.
[19] Vishnupriya. *Tamil Ilakkiyathil Manithaneya Maanpugal*. Raja Publications, Thiruchirapalli, First Edition, 2022.
[20] Jayasudha, Prakash. *Tamil Ilakkiyathil Irai Nerikal*, Today Pathippagam, Chennai, First Edition, December 2018.
[21] Chitrakala. *Tamil Aali*. New Century Book House, Chennai, First Edition, 2020.
[22] https://ta.wikipedia.org/wiki/ Accessed on 21 December 2021.
[23] https://agarathi.com/word Accessed on 21 December 2021.

**நிதிசார் கட்டுரையாளர்உறுதிமொழி / Author Contribution Statement:** இல்லை / NIL.

**கட்டுரையாளர் நன்றியுரை / Author Acknowledgement:** இத்தலைப்பில் கட்டுரை எழுதுவதற்கு வாய்ப்பளித்த ந. சுப்புரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பேராசிரியர். சு. இராமலிங்கம் ஐயா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன். / I would like to express my gratitude to Na. Subbu Reddiar 100 Educational Trust for the chance to write an article on this topic. I thank Prof. S. Ramalingam for rendering valuable suggestions.

**கட்டுரையாளர் உறுதிமொழி / Author Declaration:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன். / I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது. / The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4. 0/ International License.